DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.326/2018**

Deposition of :PW -1

| | | |
|---|---|---|
| Name | : வசந்தவேணி | Caste: |
| Father's / Husband Name: | | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Law and recording the Deposition of the Witness on 20th day of March 2025.
Accused present.

**முதல் விசாரணை :–**

நான் சேலம், தென்அழகாபுரம் காலனியில் குடியிருக்கிறேன். வீட்டுகுடித்தனமாக இருக்கிறேன். இறந்துபோன செல்வகுமார் எனது கணவர். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் தான் எனது கணவரை கொன்றுவிட்டார். ஆஜர் எதிரி எங்கள் வீட்டிற்குஎதிர்புறம் குடியிருக்கிறார். கடந்த 23.12.2017 அன்று மாலை 4 மணியளவில் எனது கணவர் ஆட்டோஓட்டுநர். அவர் சவாரிக்காக என் வீட்டிற்கு அருகில் நின்றுகொண்டிருந்தார். நான் என் வீட்டிற்கு அருகில் நின்று பேசிகொண்டிருந்தேன். அப்போது ஆஜர் எதிரிக்கும் ,அவரது மனைவி கலையரசிக்கும் தகராறு நடந்துகொண்டிருந்தது. என் கணவர் அவர்கள் தெரிந்தவர்கள் என்பதால் சண்டையை தடுக்க சென்றார். என் கணவர் சாலையை கடந்து சண்டை நடந்துகொண்டிருந்த இடத்திற்கு சென்றார். அது சட்டி,பானை கடை. அந்த கடையை ஆஜர் எதிரி தான் வைத்திருந்தார்.

எதிரி அவரது மனைவியை அடிக்க ஆரம்பித்துவிட்டார். எனது கணவர் குறுக்கே போய் ஏன் இவ்வாறு அடிக்கிறீர் என்று கேட்டார். அதற்கு ஆஜர் எதிரி நீ யார் வந்து

கேட்பதற்கு என்று தேவிடியா பையலே என்று பேசி, பக்கத்தில் இருந்த கட்டையை எடுத்து என் கணவரின் தலையின் நடு மண்டையில் அடித்தார். அதை பார்த்தவுடன் நானும், எனது தம்பி சதீசும் ஓடினோம். நாங்கள் தடுப்பதற்குள் எதிரி 2, 3 முறை எனது கணவரை தலையில் அடித்துவிட்டார். அதன் பின் எதிரி கட்டையை எடுத்துக்கொண்டு ஓடிவிட்டார். எதிரி கட்டையை எடுத்துகொண்டு ஓடியபோது உன்னை கொல்லாமல் விடமாட்டேன். உன்னை கொன்றால் தான் எனக்கு நிம்மதி என்று எனது கணவரை பார்த்து சொன்னார். என் கணவரின் தலையிலிருந்து ரத்தம் வழிந்துகொண்டிருந்தது. அதனால் ரோட்டில் சென்ற ஆட்டோவை அழைத்து எனது கணவரை ஏற்றிகொண்டு எ்ஸ்.கே.எஸ் மருத்துவமனைக்கு சென்றோம்.

அங்கு சிகிச்சை எடுத்துகொண்டு வீட்டிற்கு வந்துவிட்டோம். மறுநாள் எனது மாமா பரமேஸ்வரினிடம் போன் செய்து தகவல் சொன்னேன். அவர் வீட்டிற்கு வந்து எனது கணவரை ஐஸ்வர்யம் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். அங்கு போய் என் கணவருக்கு சிகிக்சை எடுத்து்கொண்டோம். ஸ்கேன் எடுத்துவிட்டு நாங்கள் வீட்டிற்கு வந்துவிட்டோம். 25.12.2017 அன்று என் கணவருக்கு வலி அதிகமாகிவிட்டது. மறுபடியும் என் மாமாவிற்கு போன் செய்து தகவல் சொன்னேன்.

25.12.2017 அன்று விடியற்காலை என் மாமா என் கணவரை அழைத்து சென்று அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தார். நான் மருத்துவமனையிலிருந்து துணிமணி எடுத்துவர என் மாமாவை மருத்துவமனையில் இருக்கசொல்லிவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். எனது மாமா மருத்துவமனையிலிருந்து டீ குடிக்க சென்றுள்ளார். என் கணவர் அரசு மருத்துவமனையிலிருந்து தானாக எழுந்து காலை 9 மணிக்கு வீட்டிற்கு வந்துவிட்டார். என் கணவர் அரசு மருத்துவமனைக்கு வரமாட்டேன் என்று சண்டைபோட்டதால் எங்கள் வீட்டிற்கு அருகிலுள்ள ராணி கிளினிக்கிற்கு என் கணவரை அழைத்து சென்றோம். 28.12.2017 அன்று என் கணவருக்கு வாந்தி வந்தது. அவருக்கு நினைவு சரியாக இல்லை. எங்களை யார் என்று கேட்டார். மறுபடியும் நாங்கள் என் கணவரை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சைக்கு சேர்த்தோம். அதன் பின்பு தான் போலிசார் விசாரணை

செய்ய வந்தார்கள். என்னிடம் என்ன நடந்தது என்று போலிசார் கேட்டார்கள் நான் சொன்னதை எழுதிகொண்டார்கள். என் கணவர் அவசரசிகிச்சை பிரிவில் இருந்ததால் என்னால் பேசமுடியவில்லை. போலிசர் எழுதியதில் நான் கையெழுத்து போட்டுகொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் அ.சாஆ.1. என் கணவர் 3 நாட்கள் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார். 31.12.2017 அன்று காலை சுமார் 10 மணியளவில் என் கணவர் இறந்துவிட்டார்.

என் கணவர் இறந்த விவரத்தை எனது அண்ணன் ரஞ்சித்குமார், தம்பி அர்ச்சுணன், கோபி மாமா மகன். பரமேஸ்வரன் என் மாமா ஆகியோருக்கு சொன்னேன். அதன் பின்பு எனது கணவரின் உடலை பிரேதபரிசோதனைக்கு எடுத்து சென்றார்கள். அங்கு வைத்து அழகாபுரம் போலிசர் 12 மணியிலிருந்து 2 மணிவரை எங்களை விசாரணை செய்தார்கள். போலிசர் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் குடியிருக்கும் வீட்டிற்கும், காவல்நிலையத்திற்கும் சுமார் ½ கி.மீ தூரம் இருக்கும். நான் வசிக்கும் வீட்டிற்கும், சம்பவ இடத்திற்கும் இடையே சுமார் 100 அடி இருக்குமா என்றால் இருக்கும். சம்பவ நடந்த இடத்திற்கும், காவல்நிலையத்திற்கும் சுமார் ½ கி.மீ தூரம் இருக்குமா என்றால் இருக்கும். சம்பவம்இடத்திலிருந்து எஸ்கே.எஸ் மருத்துவமனைக்கு அழகாபுரம் காவல்நிலையம் வழியாகத்தான் செல்லமுடியும் என்றால் சரிதான். நான் எனது கணவரை பிரிந்து 10 வருடமாக இருக்கிறேன் என்றால் சரியல்ல. என் கணவருக்கும் எனக்கும் குடும்ப பிரச்சனை இருப்பதால் நான் என் கணவரை பிரிந்து 10 வருடமாக சென்னையில் வசிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் பிரிந்து இருந்ததால் என் கணவர் குழந்தைகளுடன் தனியாக வசித்தார் என்றால் சரியல்ல . எனது கணவருடன் எனக்கு கருத்துவேறுபாடு ஏற்பட்டதால் நான் அவருடன் பேச்சுவார்த்தையில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் பற்றி எனது மகள் போன் மூலம் சொல்லிதான் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல.

சம்பவம் பற்றி கேள்விபட்டு சென்னையிலிருந்து சேலம் வந்து என் கணவரை அழைத்து கொண்டு அழகாபுரம் காவல்நிலையம் அழைத்து சென்றேன் என்றால் சரியல்ல. நான் காவல்நிலையத்திற்கு சென்றபோது போலிசர் சம்பவம் நடந்தது ஏன் இவ்வளவு நாட்கள் கழித்து புகார்கொடுக்கிறீர்கள் என்று கேட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல.

நான் சொல்வது தவறு என்றும், நான் காவல்நிலையத்திற்கு சென்றேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் காவல்நிலையத்திற்கு சென்றபோது அன்றைய தினம் இரவு 8 மணிக்கு அழகாவுரம் போலிசார் எதிரியையும், அவரது மனைவியையும் காவல்நிலையத்திற்கு அழைத்து வந்தார்கள் என்றால் சரியல்ல. இருதரப்பினரையும் போலிசார் விசாரித்துவிட்டு எதிரி மனநலம் பாதிப்படைந்தவர் என்பதால் எங்களை விசாரித்துவிட்டு சம்பவம் நடந்திருக்க வாய்ப்பில்லை என்று எங்களை அனுப்பி விட்டார்கள் என்றால் சரியல்ல. நான் காவல்நிலையத்திற்கு சென்று வற்புறுத்தியதால் போலிசார் மருத்துவமனைக்கு சென்றால் தான் வழக்கு பதிவு செய்யமுடியும் என்று எங்களை மருத்துவமனைக்கு அனுப்பினார்கள் என்றால் சரியல்ல.

எங்கள் வீடு சாரதாகாலேஜ் மெயின்ரோடு, அழகாபுரம், சீனிவாச பொறிகடைக்கு பின்புறம் உள்ளது என்று சொன்னால் சரிதான். நாங்கள் வசித்த வீடு வடக்கு பார்த்தது என்று சொன்னால் சரிதான். எங்கள் வீட்டிற்கு செல்லவேண்டுமென்றால் மெயின்ரோட்டிலிருந்து வடக்கிலிருந்து தெற்கு நோக்கி சென்று பின்பு கிழக்கிலிருந்து மேற்காக செல்லும் பாதையில் என் வீடு உள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது தவறு என்று என்று சொன்னால் சரியல்ல. என் வீடும், எதிரியின் கடையும் எதிர்புறம் தான் உள்ளது.

என் வீட்டிலிருந்து பார்த்தால் மெயின்ரோடு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. மெத்தையிலிருந்து பார்த்தால் மெயின்ரோடு தெரியும். சம்பவ சமயத்தில் போலிசாருக்கு யார் தகவல் சென்னது என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். எதிரி ஏற்கனவே மனநலம் பாதிக்கப்பட்டவர் என்பது எங்களுக்கும், ஊரில் உள்ளவர்களுக்கும் தெரியும் என்று சொன்னால் நாங்கள் எதிரி சட்டிபானை வாங்க

வருபவரை சம்மந்தம் இன்றி பேசுவதால் அவரை மெண்டல்லூசு என்று சொல்வோம். சம்பவம் எங்கே எப்படி நடந்தது என்று யாரிடம் கேட்டு தெரிந்துகொண்டேன் என்றால் நானே பார்த்தேன். சம்பவத்திற்கு பின்னிட்டு எனது கணவரை எஸ்கேஎஸ் மருத்துவமனைக்கு என் மகன் வசந்த் தான் அழைத்து சென்றார் என்று சொன்னால் என் மகன் பெயர் வசந்த் அல்ல.

என் கணவரிடம் மருத்துவர் எப்படி காயம் ஏற்பட்டது என்று கேட்டு தெரிந்துகொண்டார் என்றால் நான் தான் சொன்னேன். எஸ்கேஎஸ் மருத்துவமனையில் என் கணவர் சிகிச்சையில் இருந்தபோது காவல்துறையினர் வந்து விசாரித்து சென்றார்கள் என்று சொன்னால் சரியல்ல. அங்கு போலிசார் வரவில்லை. நான் சொல்வது தவறு என்றும், போலிசார் வந்தார்கள் என்றும், நான் மருத்துவமனையில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சம்பவ இடத்தில் இல்லததால் என் கணவர் எஸ்கேஎஸ் மருத்துவமனையில் எவ்வளவு நேரம் இருந்தார் என்பது பற்றிய விவரம் தெரியாது என்று சொன்னால் சரியல்ல.

ஐஸ்வர்யம் மருத்துவமனையில் என் கணவரை என் மகன் தான் சேர்த்தார் என்றும் அது பற்றி என் மகனை கேட்டுதான் நான் தெரிந்துகொண்டேன் என்றால் சரியல்ல. ஐஸ்வர்யம் மருத்துவமனையில் என் கணவர் எத்தனை நாள் சிகிச்சை பெற்றார் என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் காலையில் சென்று மாலையில் வந்துவிட்டோம். பணம் அதிகமாக செலவாகும் என்று சொன்னதால் நாங்கள் வீட்டிற்கு வந்துவிட்டோம்.

சம்பவஇடத்திற்கு போலிசர் வந்து அந்த கட்டையை எடுத்து சென்றுவிட்டார்கள் என்று சொன்னால் சரிதான். எஸ்.கே.எஸ் மருத்துமனை மற்றும் ஐஸ்வர்யம் மருத்துவமனை சிகிச்சைக்கு பிறகு எனது கணவர் நல்லமுறையில் இருந்தார் என்று சொன்னால் சரியல்ல. அரசு மருத்துவமனைக்கு 25.12.2017 அன்றுசிகிச்சைக்கு அழைத்து சென்றேன். ராணி கிளிக்கில் சிகிச்சைக்கு சென்ற விவரத்தை போலிசாரிடம் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் நான் இல்லை என்றும், ராணிகிளிக்கில் என் கணவர் நாங்கள் அங்கு

அழைத்துசெல்லவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அரசு மருத்துவமனைக்கு சென்றபோது நானும், பரமேஸ்வரனும் ஆகியோர் சென்றோம். மேற்படி விவரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் எனக்கு நினைவில்லை. 25.12.2017 அன்று காலை 9 மணிக்கு என் கணவர் என் வீட்டிற்கு வந்துவிட்டார். 25.12.2017 அன்று என் கணவரை சிகிச்சையில் சேர்க்கும் போது அவரே தவறி விழுந்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல.

போலிசார் விசாரணையிலும், புகார் வாக்குமூலத்திலும் முதலில் சிகிச்சைக்கு சேர்ந்தபோது என் கணவர் தவறி விழுந்துவிட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவ சமயத்தில் நான் இல்லை என்றும், அதனால் தான் என் கணவரை ஐஸ்வர்யம் மருத்துவமனையிலும் மற்றும் எஸ்கே.எஸ் மருத்துவமனை சென்று சிகிச்சை அளித்ததாக பொய் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. 25.12.2017 அன்று காலை 5.30 மணிக்கு வசந்த் என்பவர் தான் என் கணவரை அரசு மருத்துவமனையில் சேர்த்துள்ளார் என்று சொன்னால் நான் தான் சேர்த்தேன். என் பெயர் வசந்தவேணி.

மருத்துவர் விசாரித்த போது இரவு 7 மணிக்கு அடையாளம் தெரிந்த 3 நபர்கள் கட்டையால் தாக்கினார்கள் என்று சொன்னேன் என்று சொன்னால் சரியல்ல. 28.12.2017 அன்று மாலை அழகாபுரம் காவல் நிலைய போலிசார் வந்து மறுபடியும் போய் என் கணவரை மருத்துவமனையில் சிகிச்சை பெற சொன்னார்கள் என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் மறுபடியும் 31.12.2017 அன்று என் கணவரை சிகிச்சையில் போய் சேர்த்தோம் என்று சொன்னால் சரியல்ல. சம்பவத்திற்கு பின்னிட்டு போலிசார் 28.12.2017 அன்று என்னிடம் வாக்குமூலம் வாங்கினார்கள்.

புகார்வாக்குமூலத்தில் சாட்சி கையெழுத்து போடவேண்டும் என்பதால் மணிகண்டனை போன் செய்து வரச்சொன்னோம் என்றால் அது எனக்கு நினைவில்லை. போலிசார் புகார்வாக்குமூலத்தை என்னிடம் கேட்டுகொண்டு அதன்பின் எழுதி கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான். நான் சொன்னதை தான் போலிசார் புகார்வாக்குமூலத்தில் எழுதினார். புகார்வாக்குமூலத்தின் போலிசார் கையெழுத்து வாங்கிய பின்பு தற்போது தான் நான் நீதிமன்றம் வந்துள்ளேன். என்

கணவருக்கு எங்கு எப்படி காயம் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது என்றும் தொழில்போட்டி காரணமாக எதிரி மீது பொய்யான புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் சொன்னபடி எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. உண்மையில் சம்பவம் நடந்திருந்தால் எஸ்கேஸ் மருத்துவமனை மற்றும் ஐஸ்வர்யம் மருத்துவமனையில் எதிரியின் பெயரை சொல்லியிருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் அங்கு முதல்சிகிச்சை தான் பெற்றுகொண்டேன்.

சம்பவ சமயத்தில் நான் சென்னையில் இருந்தேன் என்றும், அதனால் தான் என் மகன் என் கணவரை அரசு மருத்துவமனையில் சேர்த்தார் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Sd/– L. Kalaivani,
III Additional District Judge,
Salem.